## நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வரும் முதன்மையான திட்டம்! மிகவும் வறட்சியான

# வேடசந்தூர் தொகுதியில் பச்சையாறு திட்டத்தை தொடங்கிடுவீர்!

## சட்டப்பேரவையில் – வேடசந்தூர் எஸ்.காந்திராஜன் கோரிக்கை!



**சென்னை, மார்ச். 27 –**

**சட்டப்பேரவையில், நீர்வளத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய வேடசந்தூர் தொகுதி கழக எம்.எல்.ஏ., செ. காந்திராஜன் "மிகவும் வறட்சியான வேடசந்தூர் தொகுதியில் பச்சையாறு திட்டத்தினைத் தொடங்கிட வேண்டும்" என வேண்டுகோள் விடுத்தார்.**

**சட்டமன்றத்தில் அவர் பேசியதாவது:**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்தியாவிலுள்ள முதலமைச்சர்களுக்கெல்லாம் முதலமைச்சராக விளங்குகிற ஒரு வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார், செய்திருக்கிறார், காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அளவிலே வெளிவருகின்ற பல்வேறு வார பத்திரிகைகள் அவற்றை வெளியிடுகின்றன. அந்த வகையிலே, மற்றோர் மைல் கல்லாக இரண்டு நாட்களுக்கு முன்பாக சென்னையிலே, மாநில உரிமைகளைப் பாதுகாக்க, ஒன்றிய பா.ஜ.க. அரசிடமிருந்து இந்திய ஜனநாயகத்தை பாதுகாக்க, கூட்டாட்சி தத்துவத்தை வலுப்படுத்த, அதனுடைய உரிமைகளை மீட்டெடுக்க மாநில முதலமைச்சர்களுடனான கூட்டுக் குழுக் கூட்டத்தை முதலமைச்சர் அவர்கள் கூட்டினார்கள்.

எப்படி இந்தியாவினுடைய சுதந்திரத்திற்காக, வெள்ளையர்களை வெளியேற்றுவதற்காக இந்திய நாடு ஒன்றுபட்டு நாட்டினுடைய சுதந்திரத்தைப் பெற்றதோ, அதேபோல, இன்றைக்கு மத்திய அரசாங்கத்தினுடைய அச்சுறுத்தலின் காரணமாக, நமக்கு ஓர் இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை வந்தவுடனேயே முதன்முதலாக அதற்கென்று குரல் கொடுத்து, இன்றைய தினம் அதற்கென்று ஒரு தனி கூட்டத்தை சென்னையிலே கூட்டி, அதிலே தென் மாநிலங்களினுடைய முதலமைச்சர்கள் மட்டுமல்ல, வட இந்திய மாநிலங்களிலுள்ள முதலமைச்சர்களும் கலந்துகொண்டிருக்கிற சிறப்பான கூட்டத்தில் சில எச்சரிக்கை மணிகளை அவர்கள் அடித்திருக்கிறார்கள். இதிலே குறிப்பாக நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு, Times of India என்ற பத்திரிகையில், *"Tamil Nadu Chief Minister M.K. Stalin made a national statement on Saturday rallying Chief Ministers and political leaders of all the Southern States beside of those Punjab and Odisha against Union Government's proposed delimitation of the Lok Sabha"* என்று வந்திருக்கிறது. இப்போது குறிப்பிட்டது மட்டுமல்ல, அதற்கடுத்தாற்போல, அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். அதாவது, *"Tamil Nadu Chief Minister M.K. Stalin who has emerged as the leader of the resistance against delimitation which affects several States by losing the existing number of seats"* என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, இதனுடைய ஆபத்து எந்தளவிற்கு இருக்கிறது என்பதை யெல்லாம் சொல்கிறபோது, சமீபத்திலே, தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்த மத்திய உள் துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள், கோயம்புத்தூரிலே சொன்னார்கள். அதாவது, தொகுதி மறுவரையால் தமிழ்நாட்டுக்கு எந்தவிதமான இழப்புகளும் இல்லை, எந்த சீட்டுகளும் குறையாது என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்கள். அவர் குறிப்பிட்டபடி தவிர, மற்ற வட மாநிலங்களில் இருக்கின்ற உத்தரப் பிரதேசம், மத்தியபிரதேசம், ஒடிசா, பீகார் போன்ற மாநிலங்களில் சீட்டுகள் கூட்டப்படாது என்று எந்த இடத்திலேயும் அவர் சொல்லவில்லை. எனவே, இதிலேயிருந்து நாம் புரிந்துகொள்ளலாம் மத்திய அரசாங்கத்தினுடைய ஒரு சூழ்நிலையில்-- உதாரணத்திற்கு நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இப்போது, உத்தரப்பிரதேச மாநிலத்தில் 80 சீட்டுகள் என்பது தொகுதி மறுவரையறை செய்யப்பட்டால் 130 சீட்டுகளாக மாறும் என்கிற வகையிலே அறிவிப்புகள் வெளியாகியிருக்கின்றன. எனவே, அவர்களுக்கு மட்டும் 50 சீட்டுகள் கூடுதலாக வருகிற போது, நம்மைப் போன்ற தென் மாநிலங்களில் இருக்கிற சீட்டுகளை ஸ்லாம்-சப்ஜெக்ட் ஒன்றுமில்லை நான் முடித்து விடுகிறேன். 50 சீட்டுகள் கூடுதலாக வருகிறபோது, நம்முடைய State-ஐ consult செய்யவில்லை.

எச்சரிக்கையாக, நம் நாட்டிற்கு, நம்முடைய தமிழ்நாட்டுக்கு ஏற்படப் போகிற பிரச்சினைகள், ஆபத்து, நாம் மத்திய அரசாங்கத்தில் வகிக்கப் போகிற பங்கெல்லாம் குறைந்துவிடும் என்பதற்காக இதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட முதலமைச்சரை நம்முடைய தமிழ்நாட்டிலே நாம் முதலமைச்சராகப் பெற்றிருப்பது என்பது மிகப் பெரிய வரப்பிரசாதம் மட்டுமல்ல, *we are proud of working under him* என்ற பெருமையான அந்த வார்த்தையை நான் இந்த நேரத்திலே சொல்லி, என்னுடைய உரையைத் தொடங்க விரும்புகிறேன்.

அதேபோன்று, எனக்கு தேர்தல் பிரச்சாரத்தின்போது என்னுடைய தொகுதிக்கு வந்து, உச்சி வெயிலில் வியர்வை சொட்டச் சொட்ட அந்த நேரத்திலும்கூட ஒரு நல்ல சூழ்நிலையிலே மக்களை எல்லாம் கவர்கின்ற வகையிலே ஒரு நல்ல தேர்தல் பிரச்சாரத்தைச் செய்து என்னுடைய வெற்றிக்கு வித்திட்ட துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த அவையிலே வீற்றிருக்கின்ற நம்முடைய அமைச்சர் பெருமக்களுக்கும், அதேபோன்று, வெற்றிக்காக பாடுபட்ட என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி அவர்களுக்கும், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கள் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அவர்களுக்கும், அதேபோன்று எனக்கு வாய்ப்பளித்த *Hon'ble Deputy Speaker*, அரசுக் கொறடா இவர்களுக்கெல்லாம், அதேபோன்று, இங்கு இருக்கின்ற என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர்கள், முதன்மைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்துச் செயலாளர்களுக்கும் இந்த அவையிலே பங்கு பெற்றிருக்கின்ற அனைவருக்கும் என்னுடைய முதல் வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இங்கே, எனக்கு இந்த அவையிலே நான் பங்கு பெறுவதற்காக எனக்கு வாக்களித்த என்னுடைய தொகுதி மக்களுக்கும் நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே, இன்றையதினம் இந்த நீர்வளத் துறையின் மானியக் கோரிக்கையில் நான் பேசுவதற்குக் காரணம் என்னவென்று சொன்னால் இன்றைக்கு என்னுடைய தொகுதி என்பது வேடசந்தூர் தொகுதி நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும் மாவட்டத்தினுடைய அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். மிகுந்த ஒரு மோசமான சூழ்நிலையில் உள்ள வறட்சியான மிகவும் வறட்சியான பகுதி. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்று சொன்னால், 1977 ஆம் ஆண்டு ஒரு பெருவெள்ளம் ஏற்பட்டது. தலைவர் அவர்களால் கட்டப்பட்ட குடகனாறு அணை ஐந்து shutter-களைக் கொண்ட அந்தக் குடகனாறு அணை அப்போது உடைந்து வெள்ளக்காடாகி சேதமானது. அதற்குப் பின்னால் மறுபடியும் அந்த shutter-களை எல்லாம் பத்து shutter-களாக கூட்டி புதிய அணை ஒன்றைக் கட்டி அந்த நீரை குடகனாறிலே தேக்கி இருக்கின்றார்கள்.

ஆகவே, 1977 ஆம் ஆண்டிற்குப் பின்னால் இன்றைக்கு தமிழ்நாட்டிலே எத்தனையோ புயல், வெள்ளம் வந்திருக்கிறது. சென்னையிலே வந்திருக்கிறது, தூத்துக்குடியில் வந்திருக்கிறது, கன்னியாகுமரி மாவட்டம் தொடர்ந்து பாதிக்கப்படுகின்ற மாவட்டங்கள் பாதித்துக்கொண்டே இருக்கின்றன. ஆனால், எங்களுடைய திண்டுக்கல் மாவட்டத்தில் குறிப்பாக, வேடசந்தூர் தொகுதி என்பது மிகுந்த வறட்சியான, தண்ணீரே இல்லாமல் இன்னும் சொல்லப்போனால் மழை வளமே குறைந்து கொண்டு வருகிறது என்று சொல்லி மத்திய அரசாங்கத்தினுடைய நீர்வளத் துறை இதிலே அறிவித்து இன்றைக்கு அதிலே எந்த நடவடிக்கையும் இனிமேல் எடுக்க முடியாது, அப்படி எடுத்தாலும் அது வீணான நடவடிக்கையாகத்தான் இருக்கும். எனவே, மாற்று வழி என்பது ஏதாவது காவேரி ஆற்றிலிருந்து அல்லது மற்ற ஆறுகளிலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்து இந்தக் குளங்களை நிரப்புகின்ற இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் மட்டுமே இதனை நிவர்த்தி செய்ய முடியும் என்று சொல்லி அவர்கள் சொன்ன காரணத்தின் அடிப்படையில் தான் இந்த மானியக் கோரிக்கையில் தொடர்ந்து ஏற்கெனவே, ஒருமுறை பேசினாலும் கூட மீண்டும் ஒருமுறை பேசுவதற்கு நம்முடைய அமைச்சரிடத்திலே அனுமதி பெற்று இன்றையதினம் நான் மறுபடியும் இந்த *demand*-ல் பேசுவதற்கான வாய்ப்பினை இன்றைக்கு நான் பெற்றிருக்கின்றேன். எனவே, இது ஒரு முக்கியமான பகுதி என்பதாலே என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றி தருவதற்கு அமைச்சரிடத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். "நீரின்றி அமையாது உலகு" என்பதுதான் ஒரு சிறிய ஒரு வரியாக இருந்தாலும் மிகப்பெரிய காரியக் காரணங்களைக் கொண்டிருக்கின்றது.

**நீரொழுங்கி**

அந்த வகையிலே நீர் ஒரு நாட்டிற்கு நீர் தேவை என்பது முக்கியமான விஷயம் என்றாலும்கூட, பண்டைய காலத்திலிருந்து நீங்கள் வரலாற்றுப் பார்த்தீர்களானால் குறிப்பாக, சோழ மன்னனுடைய இரண்டாம் நூற்றாண்டிலே கட்டப்பட்ட கல்லணை என்பது நம்முடைய தமிழ்நாட்டிலே மிகப் பெரிய ஒரு வரலாற்றைப் பெற்றிருக்கிறது. இன்றைக்கு நம்முடைய காவேரி ஆறு கர்நாடகா மாநிலத்தில் குடகு மலையில் உற்பத்தியாகி தமிழ்நாட்டில் சேலம், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்கள் வழியாக ஓடி காவிரிப்பூம்பட்டினத்தில் கலக்கிறது. இந்தச் சோழ மண்டலத்தை ஆண்டு வந்த கரிகாலச் சோழன் கி.பி. இரண்டாம் ஆண்டில் கொள்ளிடத்தையும் காவிரியையும் இணைக்கும் உள்ளாற்றின் குறுக்கே இந்த அணை கட்டப்பட்டது. அதுமட்டுமல்ல 1883-ல் காவிரி நீர் ஒழுங்கி என்று அது கட்டப்பட்டது. அதன் மூலமாக காவிரி ஆறு கல்லணையில் பிரிந்து 4,93,000 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கிறது. 1886-ல் வெண்ணாறு நீரொழுங்கி கட்டப்பட்டது அது 4,65,307 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கின்றது. கல்லணை கால்வாய் நீரொழுங்கி கல்லணை கால்வாயிலிருந்து பிரிந்து 2,56,000 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கிறது.

கொள்ளிடம் நீரொழுங்கி தஞ்சாவூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களில் ஆங்காங்கே 1,26,000 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கிறது. எனவே, இந்த வகையிலே கல்லணையை கரிகாலன் காலத்தில் கி.பி 2000 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. அதேபோன்று அதற்குப் பின்னால் வந்த ஆங்கிலேயர்கள் நம்மை ஆளவந்த ஆங்கிலேயர்கள் East India Company என்று சொல்லப்படுகின்ற ஆங்கிலேயர்கள் முதலிலே வியாபாரம் செய்யும் நோக்கில் வந்தாலும்கூட, அதற்குப்பின்னால் ஏற்பட்ட காலங்களிலே அவர்கள் இந்தக் குளங்கள், ஏரிகளை எல்லாம் தன் கைவசப்படுத்திக் கொண்டார்கள். அதனுடைய அடிப்படையில், அதற்கு பின்னால் 1853 ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியாக இருந்த அவர்கள் நம்மை ஆட்சி செய்யத் தொடங்கினார்கள்.

தொடங்கியது மட்டுமல்ல இவர்கள் ஆட்சிக்கு முறைக்கு வந்தவுடன், அவர்கள் பல்வேறு துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும்கூட, நீர்வளத் துறைக்கு மிக முக்கியமான அந்தத் திட்டங்களையெல்லாம் தீட்டி, அந்த நிகழ்ச்சியை நடத்தினார்கள். அந்தவகையிலே ஒருசமயம் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் அப்போதைய Governor-General இருந்த Lord Dalhousie நீர்ப்பாசனம் என்பது மக்கள் நலனில் அக்கறை கொண்ட ஓர் அரசின் பிரதான கடமை என்றும், இலாப நோக்கில் நீர்ப்பாசனத் திட்டங்களைத் தொடங்கக்கூடாது என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதை நான் சொல்வதற்குக்காரணம், இதுமாதிரியான திட்டங்களால் ஒரு நாட்டிற்குத் தண்ணீர் தேவை என்பது மிக அத்தியாவசியமானது. எனவே, இலாப நோக்கில் அதைப்பார்க்காமல் அந்த வசதியைச் செய்துதர வேண்டும் என்பதுதான் அவர்களுடைய நோக்கமாக இருந்தது. அந்த வகையிலே கட்டப்பட்டதுதான் முல்லைப் பெரியாறு அணையும், இரண்டாவதாக மேட்டூர் அணையும் ஆகும்.

முல்லைப் பெரியாறு என்கிற பெரியார் அணையைப் பற்றி நம்முடைய "தமிழர் நிதி நிர்வாகம்" என்கிற நூலிலே முதலமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சியால் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கின்ற அந்தப் புத்தகத்திலே பார்க்கின்றபொழுது, அது பேரியாறு என்பதுதான் பெரியார் என்று மருவியிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். எனவே, அந்தவகையில் நம்முடைய முதல்வர் அவர்களின் சீரிய முயற்சியால் நிதி யமைச்சர் அவர்கள் இந்த அவையில் அளித்துள்ள இந்தப் புத்தகமானது ஒரு வரலாற்றுப் புத்தகமாகும். 1810 காலத்தில் மதுரையின் முதல் ஆட்சியாளர் ஜார்ஜ் பாரீஸ் இந்த அணைக்கு வித்திட்டவர்.

1864-ல் Major J.G. Ryves பெரியார் திட்டத்தை வடிவமைத்தார். தண்ணீரை ஆற்றின்மூலம் தேக்கி கீழே உள்ள சமவெளிக்குக் கொண்டுவரும் திட்டத்தை மாதிரியாகக் கொடுத்து கட்டுமானத்தைச் செய்தவர் Major John Pennycuick ஆவார். எனவே இந்த வகையிலே ஒரு நீண்ட நெடிய வரலாறு பெரியார் அணைக்கு உண்டு. இந்த முன்மொழிவை 1884-ல் British அரசு ஏற்றுக் கொண்டு, 1986-ல் 999 வருடகுத்தகைக்கு திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் ஒப்பந்தம் போடப்பட்டு, இன்றைக்கு மதுரை, திண்டுக்கல், தேனி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் குடிநீர் மற்றும் பாசன வசதியைப் பெற்றுக்கொண்டிருக்கின்றன.

**மேட்டூர் அணை**

அதற்கடுத்தாற்போல, அவர்கள் இரண்டாவதாக செய்த காரியம், மேட்டூர் அணை; மேட்டூர் அணை பாசனங்களே இல்லாத மழை பெய்தால் மட்டுமே விவசாயம் செய்ய முடியும் என்ற நிலையில் உள்ள புஞ்சை நிலங்கள்தான் அதிகம். அது மட்டுமல்ல பாசனங்களையே பார்க்காத நிலங்கள் தான் நம்மிடம் ஏராளமாக உள்ளன. அதுமட்டுமில்லாமல், மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ள நீரானது கடலில் சென்று வீணாகக் கலக்கிறது. இப்படி வீணாகக் கடலில் சென்று கலக்கும் நீரை மேட்டூர் அணை போன்று பெரிய அணைகளைக் கட்டுவதன்மூலமே சேமித்துப் பயன்படுத்த முடியும் என்ற நீர்ப் பாசனத்திலே மிகுந்த ஆர்வமுடையவராக இருந்த பாசனப் பொறியாளர் Sir Arthur Cotton அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் 1834-ல் மேட்டூர் அணைத் திட்டம் முன்மொழியப்பட்டு, அது இறுதியாக பல்வேறு காலகட்டங்களுக்குப்பின்னால், பல பிரச்சினைகளுக்குப் பின்னால் 94 tmc கொண்ட அந்த அணை கட்டப்பட்டது. எனவே, இந்த வகையிலே நீர்ப்பாசனம் மட்டுமே ஒரே தீர்வு என்று அன்றைய Governor-General-ஆக இருந்த Samuel Smith என்பவரும் குறிப்பிட்டு ள்ளார்.

வறட்சியையும், பஞ்சத்தையும் பெரிய அளவில் தீர்க்க வல்ல ஒரே தீர்வு மட்டுமே உள்ளது. அது நீர் சேமிப்பு மற்றும் நீர்ப்பாசனம் மட்டுமே ஆகும் என்று கூட்டு நாடாளுமன்ற அவையில் 1900 ஆம் ஆண்டு அப்போதைய Governor-General-ஆக இருந்த Samuel Smith அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதேபோல, கிருஷ்ணா நதியில் கட்டப்பட்ட பிரம்மாண்ட அணையால் ஐந்து இலட்சம் விவசாயிகள் பட்டினியால் வாடினார்கள். அதற்குப்பதிலாக இப்போது 20 இலட்சம் மக்கள் வசதியாக வாழ்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கின்றார் கள்.

மழைவளம் இல்லாத பகுதிகளில்தான் இந்தியாவில் பஞ்சம் முதன்மையாக உள்ளது. ஆனால் இந்தப் பகுதிகளில் மழைக்காலங்களில் நீர்த்தேக்கங்களை உருவாக்கும் வகையில் அமைப்புகள் உள்ளன. நீரைத் தேக்குவதன்மூலம் அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள அனைத்துப் பகுதிகளும் பாசனம் செய்யலாம் என்று தனது உரையில் நீர்ப்பாசனம் மட்டுமே ஒரே தீர்வு என்று அவர் கூறியுள்ளார். இந்தவகையில், ஆங்கிலேயருடைய காலக்கட்டத்திற்குப் பின்னால் இன்றையதினம் நம்முடைய பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய காலத்திலே போடப்பட்ட பல்வேறு திட்டங்கள்தான் மணிமுத்தாறு அணை, அமராவதி அணை, வைகை அணை, சாத்தனூர் அணை, கீழ்பவானி அணை, கிருஷ்ணகிரி, பரம்பிக்குளம் ஆழியாறு, ஆத்தூர் நீர்த்தேக்கம் என்று மொத்தம் 19 திட்டங்கள் மூலமாக சுமார் மூன்று இலட்சம் ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசன வசதியைப் பெற்றன.

**கலைஞர் அளித்த 25 திட்டங்கள்!**

அதற்குப்பின்னால் இந்த மண்டபத்திலே, சட்டமன்றத்திலே ஒரு கர்ப்பகிரகத்தில் இருக்கிற தெய்வத்தைப் போன்று, இங்கே படமாக இருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்களை வணங்க வேண்டுமென்கிற அடிப்படையில், அவர் பல்வேறு திட்டங்களை இந்தத் தமிழ்நாட்டிற்கு கொடுத்திருக்கின்றார்கள். சித்தாறு திட்டம், மணிமுத்தாறு நதித் திட்டம், ராம நதி, கடனா நதி, பரப்பலாறு அணை, மருதா நதி, நங்காஞ்சி நதி, அடவிநயினார் நீர்த்தேக்கம், குடவினாறு நீர்த்தேக்கம் என 25 திட்டங்கள்மூலம் லட்சக்கணக்கான ஏக்கர் பாசன வசதிகளை ஏற்படுத்திய, காய்ந்த பூமிகளை வளம் பொருந்திய பகுதிகளாகத் தலைவர் கலைஞர் அவர்கள் மாற்றினார்கள். இன்றைய கோரிக்கைகளில் நான் கேட்பது என்னுடைய வேடசந்தூர் தொகுதியில், மழைவளம் குறைந்து வருவதாலும், இனி மழைக்கே வாய்ப்பு இல்லை என்கிற காரணத்தினாலும்,

கூடுதலாக ஒரு திட்டம், *investigation* செய்யப்பட்டு 2001 ஆம் ஆண்டு, ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கீட்டிலே தீட்டப்பட்டது. கடந்த வருடத்திற்கு முந்தைய வருடம் நம்முடைய நிதிநிலை அறிக்கையில் நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் 96.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, கரூரிலிருந்து அமராவதி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கின்ற ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். அத்திட்டத்தின் *phase-1, phase-2*-ல் கரூர் *district*-ல் மூன்று தொகுதிகள், திண்டுக்கல் மாவட்டத்தில் 3 தொகுதிகள் அடங்கும். எனவே, இந்த 6 தொகுதிகளுக்கும் இரண்டு *phases* ஆகப் போட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில் பார்த்தீர்களானால், அந்தத் திட்டங்கள் முழுமைபெறும்போது, தண்ணீர் முழுமையாகக் கிடைக்குமா என்கிற சந்தேகம் எங்களிடத்திலே இருக்கிறது. அந்த வகையிலே, அந்தத் திட்டத்தை மறுஆய்வு செய்து கொண்டிருந்தாலும் கூட, அதுகுறித்து கூடுதலாக கலந்தாய்வு செய்து, முழுமையாக தண்ணீர் வரக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நம்முடைய அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**பச்சையாறுத் திட்டம்**

அதேநேரத்தில், பச்சையாறுத் திட்டம். பச்சையாறுத் திட்டம் தலைவர் கலைஞர் காலத்திலிருந்து நீண்ட காலமாக ஒரு நிலுவையிலுள்ள ஒரு திட்டம். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் *pending* ஆக நிலுவையாக இருக்கிறது. எனவே, பச்சையாறுத் திட்டத்திற்கான நிதியை ஒதுக்கி அதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்து, பச்சையாறுத் திட்டம் தொடங்குவதற்கு நம்முடைய மரியாதைக்குரிய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அவசியம் உதவி செய்வார்கள் என்று நான் நம்புகின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, ஒரு நிமிடத்தில் உரையை முடித்து விடுகிறேன். தங்களிடம் எனது தொகுதி கோரிக்கைகளைக் கொடுத்துவிடுகிறேன். அவற்றிலிருந்து அதிகமாக எதையும் சொல்லவில்லை. நீர்வளத் துறையின் 2-வது *phase*-ன்போது, ரூ.96.50 இலட்சம் மதிப்பீட்டில் தீட்டப்படும் அமராவதி ஆற்றுத் திட்டத்திலே 45 குளங்கள் குறைக்கப் பட்டிருக்கின்றன. மேலும், 43 ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான இரண்டு PWD கண்மாய்கள். இது பிற்காலத்திலே ஒரு பிரச்சினையை ஏற்படுத்தக்கூடிய ஒரு செய்தியாக உள்ளது. எனவே, அந்த வகையிலே அந்தத் திட்டத்தை அமைச்சர் அவர்கள் மாற்றியமைத்து, ஏற்கெனவே திட்டத்தின் முதல் *phase*-ல் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தம் 405 குளங்களுக்கும் தண்ணீரைக் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல, குடகனாறு அணையின் *shutter repair* செய்வதற்காக, (மணியடிக்கப்பெற்றது)

விவசாய சங்கம் *represent* செய்து இருக்கிறார்கள். 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் *shutter*-களை *repair* செய்வதற்கும், 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாய்க்கால் சீர மைப்பிற்கும் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் நம்முடைய நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் நிதியை ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். அதனுடைய அடிப்படையில் முழுமையாக வேலை முடிந்து 1977 ஆம் ஆண்டு அணை உடைந்த பிறகு, இத்தனை ஆண்டு காலம் தண்ணீரே இல்லாமல் வறண்டு போயிருந்த அந்த குடகனாறு அணை, இந்த ஆண்டு முழுமையாக 27 அடி வரையில் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு, ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வீணாகாமல் இன்றைக்கு விவசாயிகளுக்கு பயன்பட்டு வருகிறது. கிணறுகளில் தரைமட்டத்திலிருந்து கிட்டத்தட்ட 15 அடி உயரம் வந்திருக்கின்ற அளவிற்கு ஒரு பெருமையைச் சேர்த்திருக்கின்றார்கள். ஒரு பெரிய உபயோகமான காரியத்தைச் செய்தி ருக்கின்றார்கள். எனவே, அவர்களுக்கும் முதல்வர் அவர்களுக்கும் நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் ஏற்கெனவே இந்த அணையிலிருந்து 54 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கரூர் மாவட்டத்தில் இருக்கிற குளங்களுக்குத்தான் தண்ணீர் செல்கிறது. 'படைத்தவனுக்கு இல்லாத பாகற்காயா' என்று கிராமத்திலே பேசுவார்கள். அதுபோல, வேடசந்தூரிலேயே அணையைக்கட்டி வேடசந்தூரிலேயே நாங்கள் பொழுதுபொக்கிற்காக, அதாவது குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு போய் பார்க்கிறார்களே தவிர, எந்தக் குளங்களுக்கும் தண்ணீர் வருவதற் கான சட்டபூர்வமான பாதுகாப்பு இல்லை. ஆனால், தண்ணீர் எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். நான் *open* ஆகச் சொல்கிறேன். தண்ணீரை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இதைச் சட்டபூர்வமாக மாற்றித் தர வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. இது சம்பந்தமாக விவசாயச் சங்கங்களும், மற்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அந்த வாய்க்கால்களை ஒட்டியுள்ள 9 குளங்களுக்கும் சட்டபூர்வமாக தண்ணீரைக் கொண்டு செல்வதற்கான அரசு ஆணையை, G.O.-வை நீங்கள் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தம் 34 பக்கங்கள் வைத்துள்ளேன். அவற்றை துணை சபாநாயகர் அவர்களிடம் நான் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் அவையில் படித்ததாகக் கருதி, அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தொடர்புடைய துறைகளைச் சார்ந்த அமைச்சர்கள் அவற்றைக் கனிவோடு பரிசீலித்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, எனக்கு அளித்த வாய்ப்பிற்காக நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.



மதுரை தெற்கு மாவட்டம் உசிலம்பட்டி நகர் கழக தி.மு.க. சார்பில் நகரச் செயலாளர் எஸ்.ஓ.ஆர். தங்கப்பாண்டியன் ஏற்பாட்டில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு கிராமிய கலைஞர்களின் குடும்பத்தினர் 500 பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் முருகன், பழனி, அஜித்பாண்டி, முத்துராமன், சுதாகரன், ஜெயச்சந்திரன், அருண், விமல், வழக்கறிஞர் சரவணகுமார், குபேந்திரன், மோகன், சின்னன், தொகுதி பொறுப்பாளர் செல்லத்துரை, ஜெயப்பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், பயனாளிகள் உள்ளனர்.

## உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு

# தடையின்றி குடிநீர் வழங்க ரூ.60 கோடி நிதி ஒதுக்கீடு!

## தமிழக முதல்வருக்கு ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ நன்றி!

உளுந்தூர்பேட்டை, மார்ச் 27 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சியில் 24 வார்டுகள் உள்ளது. இதில் 25,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர்.

நகரப் பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் வழங்கப்பட்டு வரும் குடிநீர் கெடிலம் ஆற்றில் இருந்தும், மட்டிகை, சேந்தநாடு உள்ளிட்ட பகுதியில் இருந்தும் பைப் லைன் மூலமாக கொண்டு வரப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் சேகரித்து பின்னர் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட இந்த பைப்லைன் சேதமடைந்து அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு வருவதால் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் தடை ஏற்பட்டு வந்தது.

இந்த நிலையில் இந்த பைப் லைன்களை மாற்றி புதிய பைப்லைன் அமைத்து தர வேண்டுமென உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் தமிழக முதல்வர், கழகத் தலைவர், தமிழக துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் ஆகியோருக்கு கோரிக்கை வைத்து சட்டமன்றத்தில் பேசினார்.

இதன் அடிப்படையில் நேற்று முன்தினம் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கையில் உளுந்தூர்பேட்டை நகராட்சி பகுதியில் தடை இன்றி குடிநீர் வழங்க ரூபாய் 60 கோடி நிதி ஒதுக்கீடு செய்வதாக சட்டப்பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு அறிவித்தார்.

இதையடுத்து தமிழக முதல்வர், கழகத் தலைவர் மற்றும் துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர், துறை அமைச்சர், மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் ஆகியோர்களுக்கு ஆ.ஜெ. மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. நன்றி தெரிவித்துள்ளார்.

## பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர் பேரூர் கழகம் சார்பில்,

# கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்- கரூர்.முரளி சிறப்புரையாற்றினார்கள்!

பெரம்பலூர், மார்ச் 27-

பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர் பேரூர் கழகம் சார்பில், கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், அரும்பாவூர் பேரூர் கழகச் செயலாளர் எம்.ஆர்.ரவிச்சந்திரன் தலைமையில், ஒன்றிய பிரதிநிதி டி.மதிவாணன் வரவேற்புரையில், அரும்பாவூர் கலைஞர்திடலில்நடைபெற்றது.

வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.நல்லதம்பி, பேரூர் அவைத்தலைவர் ஆர்.மணி, அரும்பாவூர் பேரூராட்சி தலைவர் வள்ளியம்மை ரவிச்சந்திரன், பேரூராட்சி துணைத் தலைவர் எஸ்.சரண்யா குமரன், பேரூர் துணைச் செயலாளர்கள் ஆர்.குணசேகரன், அ.பார்வதி, மாவட்டப் பிரதிநிதிகள் சீ.ஈஸ்வரன்,

சி.எல்.ராஜேந்திரன், ஒன்றிய பிரதிநிதிகள் ஆர். பூசமுத்து,அ.பாண்டியன், என்.முருகேசன், எஸ்.செந்தில்குமார், பேரூர் கழக பொருளாளர் எம்.அழகேசன், பேரூர் மகளிர் அணி அமைப்பாளர் எல்.இந்திராணி, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் க.ஜெகதீசன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் எஸ். சுதாகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில்,மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர்.முரளி கலந்து கொண்டு, தி.மு.க.வின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சின்னசேலம் பேரூரைச் சேர்ந்த எஸ்.கே.செந்தில்குமார் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப் பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 26.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் நகர பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நகராட்சி சார்பில் ரூ 9 / – இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக வாங்கப்பட்ட கொசு மருந்து (புகை) தெளிக்கும் மூன்று புதிய இயந்திரங்களை கம்பம் நகர் மன்றத் தலைவர் வனிதா நெப்போலியன் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டு நகராட்சி அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டது. நிகழ்வின் போது நகராட்சி ஆணையா ளர் உமா சங்கர், நகராட்சி சுகாதார அலுவலர் அரசகுமார், நகராட்சி உதவி பொறியாளர் சந்தோஷ்குமார், நகராட்சி மேலாளர் ஜெயந்தி மற்றும் நகராட்சி பணியாளர்கள், ஊழியர்கள் உடனிருந்தனர்.